[17th September 1958

SRI M. KALYANASUNDARAM : தனிப்பட்ட தொழிலாளர்கள் பழி வாங்கப்படுவதின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறபடியால் பழி வாங்கப்படும் வழக்குகள் நேரடியாகவே தொழிலாளர் கோர்ட்டுக்கு போகக் கூடிய வழியில் சட்டத்தைத் திருத்த சர்க்காருக்கு ஆலோசனை உண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஷாப் சட்டத்திலும், ஹோட்டல் சட்டத்திலும், நேற்று முன் தினம் விவாதித்த பீடித் தொழிலாளர் சட்டத்திலும் அந்தவிதமான உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்ற உரிமை எல்லாத் தொழிலாளர்களுக்கும் கொடுத்து விட்டால் தொழில் தகராறுகள் கோர்ட்டுக்கு போவது குறைந்து விடும் என்று சர்க்கார் கருதுகிறது. அதுபற்றி பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

SRI C. NATARAJA ODAYAR : தொழில் தகராறு சம்பந்தமாக உதாரணமாக பஸ் கண்ட்ராக்டர் மாதிரியுள்ளவர்கள் இன்ஸ்பெக்டர் அவர்களிடம் கேஸ் கொடுத்தால் முடிவு தெரிய இரண்டு வருஷங்கள் ஆகிறது. காரணம், தொழில் அதிகாரிகள் முதலாளிகளுக்கு சம்மன்ஸ் அனுப்பினால் இரண்டு வருடங்கள் கழிந்தும்கூட அவர்கள் ஆஜராவதில்லை. அவர்கள் பேரில் நடவடிக்கைகள் எடுக்கும் அதிகாரம் அதிகாரிகளுக்கு இல்லையென்றும் சொல்லப்படுகிறது. ஆகவே இதைப்பற்றி ஆலோசித்து சர்க்கார் ஒருமுடிவிற்கு வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வது, ஒரு வருடத்திற்கு முன் உள்ள நிலையாக இருக்கலாம். இப்பொழுது முதலாளிகளுக்கு சம்மன்ஸ் அளித்து, அவர்கள் வராவிட்டால் உடன்டியாக லேபர் ஆபீசர்கள் அவர்களுடைய சிபார்சை சர்க்காருக்கு எழுதியனுப்பும்படி உத்திரவு போட்டிருக்கிறோம்.

Srivaikuntam Anicut

* 262 *Q.*—SRI M. K. SOMASUNDARAM (on behalf of Sri M. S. Selvarajan) : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the quantity of water that flowed down the Srivaikuntam Anicut in the Tirunelveli district as waste water, for the last ten years, yearwar;

(*b*) the quantity of water that flowed down this year from the anicut, as waste, before the completion of the Manimuthur Project and after it; and

(*c*) whether any proposal for utilising this water for irrigation by constructing a bed dam near Kurangani or anywhere below in Tiruchendur taluk or diverting the water to flow into the Kudiraimozhitheri has been considered and worked upon?

THE HON. SRI P. KAKKAN : (*a*) *to* (*c*) The attention of the Member is invited to the paper[a] laid on the table of the House.

Wells

* 263 *Q.*—SRIMATHI T. N. ANANDANAYAKI : Will the Hon. the Minister for Home be pleased to state when the subsidy or loan given by the Government for digging wells for irrigational purposes by the Agriculturists was stopped and the reasons for the same?

---

[a] Printed as Appendix V on pages 100-101 infra.